# சிங்காரச்சென்னை

SINGHARA CHENNAI

ஆசிரியர் S. ரங்கநாதன் | தமிழ் மாதம் இருமுறை

05 பிப்ரவரி 2010 - 19 பிப்ரவரி 2010 | மலர் 2 - இதழ் 03 | இலவச விநியோகம் | 16 பக்கங்கள்

05 FEBRUARY 2010 - 19 FEBRUARY 2010 | VOLUME 2 - ISSUE 03 | Free distribution | 16 PAGES


## நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் லிப்ட் வசதியுடன் கூடிய நடைமேம்பாலம்

# துணை முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார்





நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் கண்பத் ஹோட்டல் அருகில் பாதசாரிகளின் பயன்பாட்டுக்காக லிப்ட்டுடன் கூடிய நடை மேம்பாலம், மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ளது. இதை திறந்து வைத்து துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியது:

நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலை, போக்குவர்தது நெரிசல் மிகுந்த பகுதியாக விளங்குவவதால், லிப்டுடன் கூடிய நடை மேம்பாலம் அமைக்க திட்டமிட்டு, ரூ. 60.88 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோல் சைதாப்பேட்டையிலும், புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும் இடத்தின் அருகில் வாலாஜா சாலையிலும் தலா ரூ.94 லட்சம் செலவில் லிப்ட்டுடன் கூடிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட உள்ளன. இந் நடைமேம்பாலங்களின் பயன்பாடு மற்றும் வரவேற்பைப் பொருத்து சென்னையில் தேவையுள்ள மற்ற பகுதிகளிலும் லிப்டுடன் கூடிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்படும் என்றார்.

மாநகராட்சி ஆணையர் ராஜேஷ் லக்கானி கூறியதாவது : இந்த நடைமேம்பாலம் மின்சாரம் மூலம் இயக்கப்படுகிறது. மின்சாரம் திடீரென துண்டிக்கப்படும்போது லிப்ட் பாதி வழியில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காக பாட்டரி பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 20 நிமிடங்களுக்கு லிப்டை இயக்க முடியும். லிப்டை இயக்குவதற்காக உதவியாளர் ஒருவரும் மாநகராட்சி சார்பில் பணியமர்த்தப்பட உள்ளார் என்றார்.

விழாவில் மேயர். மா. சுப்பிரமணியன், மாநகராட்சி கவுன்சிலர் வா.கணேசன், ரெட்சன் அம்பிகாபதி, வி.எஸ்.ராஜ், மா.பா. அன்புதுரை,சி.சியாமளா, பா.வெங்கி, ருத்ரன், ஸ்டெர்லிங் மோகன், டி.ஜே.தங்கவேல் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





# ஹண்டே மருத்துவமனையை நிதியமைச்சர் அன்பழகன் திறந்துவைத்தார்

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் முன்னாள் அமைச்சர் எச்.வி.ஹண்டே அவர்களின் மருத்துவமனையை தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.

மேற்கண்ட விழாவில் பாஜகவைச் சேர்ந்த இல.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி.சேகர், விஜயாதாயன்பன், மாமன்ற உறுப்பினர் வா.கணேசன், ரெட்சன் அம்பிகாபதி, மா.பா.அன்புதுரை, ஜே.சுந்தா மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

மருத்துவமனை மிக நேர்த்தியான முறையில் கட்டமைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.












## வீடு / ஃப்ளாட் / அலுவலகம் வாடகைக்கு / வாங்க / விற்க

**விக்னேஷ் ஹோம்ஸ்**

இரண்டாவது மாடி, பழைய எண். 188, புதிய எண். 132,
வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம் காவல்நிலையம் எதிரில்,
**ரூபாய் 3,000, 4,000, 7,000, 8,000 மற்றும்**
**அனைத்து பட்ஜெட்டில் வீடு வாடகைக்கு உள்ளது.**



**N.முரளிஸ்ரீதரன்,**

**ஆயிரம் விளக்கு பகுதி துணைதலைவர்,**
தமிழ்திருநாடு நிலம், வீடு, மனை
தரகர்கள் நலச்சங்கம்

**93807 04083, 93808 40393**

# அகத்தீசுவரர் ஆலயத்தில் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் பொது விருந்து
# மேயர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டார்






பேரறிஞர் அண்ணா அவர்களின் 41வது நினைவுநாளை முன்னிட்டு நுங்கம்பாக்கம் அகத்தீசுவரர் ஆலய திருமண மண்டபத்தில் பொது விருந்து நடைபெற்றது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் மேயர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு அண்ணா புகைப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பொதுவிருந்தை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அறநிலையத்துறை இணை ஆணையாளர் வாசுநாதன், செயல் அலுவலர் அருட்செல்வன், பரம்பரை அறங்காவலர்கள் கல்யாணராகவன், ராதாகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் வா.கணேசன், ரெட்சன் அம்பிகாபதி, வி.எஸ்.ராஜ், மா.பா.அன்பு, எம்.டி.ஆர்.நாதன், பழக்கடை வீ.மணி, டி.ஜே. தங்கவேல், நுங்கை சுரேஷ், ஸ்டெர்லிங் மோகன், வரதை த.பரி, என்.பி.பக்தவச்சலம், கு.லாரன்ஸ், வரதை வீ.ராஜு, கிருஷ்ணா, வேலப்பன், சிதம்பரம், சிங்காரச் சென்னை எஸ்.ரங்கநாதன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

விழாவிற்குப் பின்னர் ஆலயத்தைச் சுற்றிப் பார்வையிட்ட மேயர் அவர்கள் அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டார்.









# A.P.V.P. தேவஸ்தானத்தில் தைப்பூசத் திருவிழா - வள்ளலார் வழிபாடு




சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை அகத்தீசுவரர் திருக்கோயிலில் மகா சன்னதி கொண்டு கருணையே வடிவாக எழுந்தருளியுள்ள அருள்மிகு திருவருட்பிரகாச வள்ளலார் வடலூர் சிதம்பர ஜோதி ஸ்ரீஇராமலிங்க சுவாமிகளுக்கு தைப்பூச விழா 30-1-2010 முதல் 2-2-2010 முடிய மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

குறிப்பாக, 30-1-2010 சனிக்கிழமை தைப்பூசத் தினத்தன்று காலை 8 மணிக்கு வள்ளலார் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்டு மாடவீதி திருவீதியுலா நடைபெற்றது.

காலை 8-30 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி தீப தரிசன வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. சன்னதியில் வள்ளல் பெருமானுக்கு சிறப்பான புஷ்ப அலங்காரம் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வழிபாடு முடிந்தவுடன் பக்தர்களின் நோய், பிணிகள் நீங்கவும், செல்வம் பெருகவும்,மகப்பேறு பெறவும், திருமணம் முதலிய மங்கள நிகழ்ச்சிகள் உடனே தடையின்றி நடைபெறவும் கூட்டுப்பிரார்த்தனை **''அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி - தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி''** எனும் மகாமந்திரத்தை கூறி பிரார்த்தனை செய்தது விண்ணை முட்டியது.





காலை 10 மணிக்கு வள்ளலார் அருளிய அருட்பெருஞ்சோதி அகவல் 1596ம் பாராயணம் முற்றோதல் நடைபெற்றது. பின்னர் மதியம் சுமார் 400 பேருக்கு இனிப்பு பாயாசத்துடன் சிறப்பாக அன்னதானம் வழங்கப்பட்டது. சென்னை திரு ஹரிபாஸ்கர் குடும்பத்தாரின் உபயத்துடன் அன்னதானம் நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு சுமார் 60 பேருக்கு மேல் கலந்துகொண்ட மகளிர் அகல்விளக்கு ஜோதி வழிபாடு அகவல் பாராயணத்துடன் நடைபெற்றது.

மாலை 6 மணிக்கு தீபஜோதி வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. மாலை 6.30 மணிக்கு சென்னை ஸ்ரீஸாயி ஸங்கீதாலயா குரு ஸத்ய கான சுந்தரம் திருமதி இந்துமதி மற்றும் அவர்தம் மாணவியருடன் அருட்பா பாடல்களை அள்ளித் தந்தனர். வள்ளலார் என அன்புடன் அழைக்கப்பெறும் இராமலிங்க ஸ்வாமிகளால் பாடப்பெற்ற திருஅருட்பா என்னும் கடலிலிருந்து சில முத்துக்களை எடுத்துப் பாடினர். விநாயகரை தொழுது, கந்தகோட்ட முருகப் பெருமான் புகழ்பாடும் தெய்வமணிமாலை, மகாதேவ மாலை, மாணிக்கவல்லிமாலை இவைகளுடன் கந்தர் சரணபத்து, நமச்சிவாய பதிகம், அற்புத நிலை ஆகிய பாடல்களை இனிமையாக இசைத்தனர். அருட்பெரும்ஜோதி அகவலை பாடி நிறைவாக ஒரு தில்லானாவை அதில் அருட்பா பதிகத்தை ஸாஹித்யமாக அமைத்து பாடிய விதம் அனைவரையும் கவர்ந்தது. குரு ஸத்ய கான சுந்தரம் இந்துமதி அவர்கள் திருஅருட்பா பாடல்களை தெய்வீக மணம் கமழ பாடியது பக்தர்களை பரவசமடைய செய்தது.

தைப்பூசவிழாவின் 2வது நாள் 31-1-2010 அன்று மாலை ஜோதி வழிபாடு முடிந்து 6.30 மணிக்கு வள்ளலார் பற்றிய ஆய்வு, ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் புலவர் சி.வெ.சுந்தரம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. வள்ளலார் வாழ்க்கை வரலாறு, திருவருட்பா, சன்மார்க்க நெறி ஜீவகாருண்யம், மரணமிலாப் பெருவாழ்வு, நோய்களை நீக்கியது, அன்னதான தருமச்சாலை நிறுவியது, போன்ற பல்வேறு பொருள்பற்றி ஆய்வுரை வழங்கினார்கள்.

1-2-2010 அன்று 6 மணிக்கு ஜோதி வழிபாடு முடிந்தவுடன் ஸ்ரீ ஸாயி ஸங்கீதாலயா குரு இந்துமதி அவர்களின் அற்புத அருட்பா இசைப் பேருரை நடைபெற்றது. அதுபோழ்து 5-10-1823ல் வள்ளலார் மருதூரில் அவதரித்தது சென்னையில் வாழ்ந்தது, நிலைக்கண்ணாடியில் திருத்தணி முருகன் காட்சியளித்தது, 9 வயதில் ஸ்ரீகந்தகோட்டம் முருகனை பாடியது, வடிவுடைநாயகி சமேத திருவொற்றீசுவரரை பாடிப் பரவியது, அருள்மிகு வடிவுடை அம்மன் மானுட ரூபத்தில் வள்ளலாருக்கு உணவளித்தல், சகோதரி மகள் தனம்மாளை மணந்தது, இல்லறத்தில் இருந்து துறவறம் மேற்கொண்டது. சிவகாமசுந்தரி அம்மாள் சமேத ஸ்ரீதில்லை சிதம்பரம்

நடராஜ பெருமானை வழிபட்டு பல்வேறு பதிகங்களை பாடியது, தண்ணீரில் விளக்கு எரித்தது, தருமச்சாலை 1867ல் அமைத்து அன்னதான சுடரை ஏற்றியது, 1872ல் சத்திய ஞானசபை அமைத்தது, வேட்டவலம் ஜமீன்தார் மனைவிகளை பிடித்த மகோதரம், பிரம்மராட்ச்சத்தை நீக்கியது, 30-1-1874 தைப்பூசத்தினத்தன்று வடலூருக்கு அருகில் மேட்டுக்குப்பத்தில் சித்தி வளாக மாளிகை அமைத்து உள்சென்று திருக்காப்பிட்டுக்கொண்டு அருட்பெருஞ்ஜோதியுடன் ஜோதியாக உட்கலந்தது பற்றி இன்னிசை

செயல் அலுவலர் க.அருட்செல்வன் அவர்களும் வள்ளலார் சன்னதி, திருவருட்பா பாராயண சபை உறுப்பினர்களும் ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தியுள்ளார்கள்.

வழக்கம்போல் பரம்பரை அறங்காவலர் இரா. கல்யாணராகவன் விழா நிகழ்ச்சிகள், அரங்க வடிவமைப்பு, வரலாற்று படவரைவு, வள்ளலார் கட்அவுட் முதலியற்றை வள்ளலார் சன்னதி உறுப்பினர்களுடன் இணைந்து மிக சிறப்பாக செயல்படுத்தியுள்ளார்.

வள்ளலார் வாழ்க்கை வரலாற்று ஓவியங்களை அறங்காவலர் இரா.









பாடல்களுடன் நடுவே செய்தி பேருரையாக வழங்கியது சிறப்புக்குரியது.

பேருரையில் தம் மாணவியர்களைக் கொண்டு ஆங்காங்கே பாடல்களையும் இசைக்க செய்தார்.இவருடன் இணைந்து பாடிய அத்தனை மாணவிகளும் சிறப்பாக பாடினர். நம் நுங்கை பகுதி மக்களும் மகிழந்தனர்.

அகிலாண்டநாயகியும், அகத்தீஸ்வர பெருமானும் இந்த இசைப்பள்ளி மேன்மேலும் வளர அருள் செய்ய வேண்டுவோம். இந்நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பக்திப் பெருவெள்ளத்தில் மெய்மறந்தனர். பொதிகை தொலைக்காட்சி (டிவி) இதை 31-1-2010 காலை 10 மணி செய்தித் தொகுப்பில் வெளியிட்டு மகிழ்ந்தது.

2-2-2010 அன்று 6.30 மணிக்கு பன்னிரு திருமுறை வேதபாராயண ஓதுவார்கள் குழு நிகழ்த்திய திருவருட்பா இன்னிசை சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாபெரும் விழாவினை பரம்பரை அறங்காவலர்களான இரா. கல்யாணராகவன், இரா. இராதாகிருஷ்ணன், திருக்கோயில் அலுவலக

கல்யாணராகவன் அவர்கள் புதல்வி செல்வி பத்மபிரியா அழகிய ஓவியமாக வரைந்தது காண்பவர் கருத்தை கவர்ந்தது.

நால்வர் நற்பணி மன்றத்தினரும் மகளிர் அணியினரும் மேற்கண்ட விழா சிறப்பாக நடைபெற அனைத்து உதவிகளையும் நல்கினார்கள்.

ஏராளமான பக்தர்கள் பொருளுதவியும், தங்களது உழைப்பையும் இவ்விழாவிற்குப் பங்களித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் விழாக்குழுவினர் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

**மேற்கண்ட விழாவில் தேனாம்பேட்டை கனரா பேங்க் சர்க்கிள் ஆபிஸ் ஜெனரல் மேனேஜர் திருமதி லலிதா லக்ஷமணன், சென்னை மாவட்ட காந்தி பேரவை செயலாளர் என்.ரவி, சிதம்பரம், சிங்காரச் சென்னை எஸ்.ரங்கநாதன், தசரதன், மற்றும் பலர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.**

www.chennai34.com




India's No.1
FAST TRACK®
Call Taxi
CHENNAI
2473 2020
2888 9999

மாதம் முழுவதும் மின்கட்டணம் செலுத்தும் வசதி அறிமுகம்

## மின்கணக்கீடு (ரீடிங்) செய்த 20 நாட்களுக்குள் மின்கட்டணம் செலுத்த வேண்டும்

மாதம் முழுவதும் மின் கட்டணம் செலுத்தும் புதிய வசதியை மின்சார வாரியம் சென்னையில் அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய வசதி நுங்கம்பாக்கம் மற்றும் மகாலிங்கப் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட மின் உபயோகதாரர்களுக்கு பிப்ரவரி 1ஆம் தேதி முதல் அமுலுக்கு வருகிறது. இதுவரை 15நாட்கள் 16ம் தேதி முதல் 30ம் தேதிவரை மின் கணக்கீடு செய்யப்படும். 15 நாட்கள் மின் கட்டணம் செலுத்தலாம் என்ற முறை இருந்து வந்தது.

இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய முறைப்படி, மாதம் 30 நாள்களும் மின் கணக்கீடு செய்யப்படும். இதுபோல் 30 நாட்களும் (விடுமுறை நாள்களைத் தவிர) மின்கட்டணம் செலுத்தலாம்.

**மின் கணக்கீடு செய்த 20 நாள்களுக்குள் மின்கட்டணத்தை செலுத்த வேண்டும். 20 நாள்களுக்குப் பின் செலுத்துபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.** இப்போது பின்பற்றப்படும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கணக்கீடுசெய்யும் முறையே தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்று மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

இணையதளம் மூலம் செலுத்தும் வசதி : மின் கட்டணத்தை இணைய தளம் மூலம் செலுத்தும் வசதியையும் மின்சார வாரியம் ஏற்கனவே அறிமுகம் செய்துள்ளது.

இதற்காக இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ., ஆக்சிஸ் வங்கி, சிட்டி யூனியன் வங்கி ஆகிய வங்கிகளுடன் 'நெட் பேங்கிங்' மூலம் மின்கட்டணம் செலுத்துவதற்கான ஒப்பந்தத்தை செய்துள்ளது.

சென்னை நகர எல்லையில் உள்ளவர்களுக்கு மட்டும் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த வசதி, விரைவில் மற்ற நகரங்களுக்கும் அறிமுகம் செய்யப்பட உள்ளது என்றும் மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

## ரேஷன் அட்டை தணிக்கை விவரம் ரேஷன் கடைகளில் பார்க்கலாம்

ஆயிரம்விளக்கு, மயிலாப்பூர், தாம்பரம், , ராயபுரம், அம்பத்தூர், சேப்பாக்கம், சிதம்பரனார் (யானைக்கவுனி, தங்கசாலை உள்ளிட்ட பகுதிகள்) ஆகிய மண்டலங்களில் ரேஷன் அட்டை தணிக்கைப் பணிகள் நடத்தப்பட்டன. தணிக்கையின்போது, வீட்டில் இல்லாத மற்றும் முகவரி மாறிய குடும்பங்களுக்கு பொருள்கள் நிறுத்தப்படும். யார் யாருக்கு பொருள்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்கிற விவரம் சம்பந்தப்பட்ட ரேஷன் கடைகளில் ஒட்டப்பட்டுள்ளன.

அந்த எண்ணில் உள்ள ரேஷன் அட்டைதாரர்கள் கடைகளுக்குச் சென்று இலவசமாக விநியோகிக்கப்படும் விண்ணப்பங்களைப் பெற்று மேல்முறையீடு செய்யலாம்.

இருப்பிடச் சான்றாக வாக்காளர் அடையாள அட்டை, வீட்டு வரி ரசீது, ஓட்டுநகர் உரிமம், பாஸ்போர்ட், எரிவாயு சிலிண்டர் நிரப்பு ரசீது, மின் இணைப்பு அடையாள அட்டை, வங்கி சேமிப்பு புத்தகம், தொலைபேசி கட்டண ரசீது, அஞ்சல்துறை வழங்கும் இருப்பிட அடையாள அட்டை ஆகியவற்றின் ஏதேனும் ஒன்றின் நகலை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்து பிப்ரவரி 27ஆம் தேதிக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும்.

**சிங்காரச்சென்னை**

(தமிழ் மாதம் இருமுறை)

58/19, வடக்கு மாட வீதி, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
போன் : 98403 44783, 4359 6070
மின்னஞ்சல் : singharachennai@gmail.com

www.chennai34.com

WE'RE READY TO HELP YOU START THE PATH TO YOUR NEW CAREER

Dolphin™ Computer Academy
NUNGAMBAKKAM



**Learning Professional Courses**

- MS Office, Tally 9.0 ERP
- C, C++,VB, Java, J2EE
- C#, Vb.Net, ASP.Net
- DTP - ( Photoshop, Corel Draw, Page Maker )
- WAMP - Windows, Apache, MySql, PHP
- Web Design - HTML, CSS, Flash, DreamWeaver
- MCP, CCNA, Software Testing,
- Mobile Communication

Special Offer upto 75%*

ஹார்டுவேர் & நெட்வொர்க் இன்ஜினியர்
Hardware & Network Engineer
காலம்: 4 மாத செய்முறைப் பயிற்சி, தினமும் 2 மணி நேர

மொபைல் போன் சர்வீஸ் இன்ஜினியர்
Diploma in Mobile Phone Service Engineer
காலம்: 2 மாத செய்முறைப் பயிற்சி, தினமும் 2 மணி நேரம்
கல்வி தகுதி: 8 / 9 / 10 / +2 / ITI / Diploma / Degree (Pass / Fail)
Employed / Unemployed / Housewives

பயிற்சியின் சிறப்பு அம்சங்கள்

- 2010-ல் செல்போன் இணைப்புகளின் எண்ணிக்கை 50 கோடியை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் 5,00,000 பேருக்கு வேலைவாய்ப்பு...
- **Dolphin Mobile Phone Academy** என்பது மொபைல் பயிற்சிக்கு என்றே நவீன முறையில் அமைக்கப்பட்ட பயிற்சி நிறுவனம்.
- **100%** தரமான செய்முறைப்பயிற்சி
- செல்போன் சாப்ட்வேர் மற்றும் ஹார்டுவேர் இரண்டிலும் தரமான பயிற்சி
- ஆண்/பெண் இருபாலருக்கும் உகந்த பயிற்சி
- குறைந்த கல்வி தகுதி உள்ளவர்களும் கற்றுக்கொள்ளலாம்.
- தமிழ்/ஆங்கிலம் மொழியிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- சுயதொழில் (சர்வீஸிங் மையம் / உதிரி பாகங்கள் விற்கும் கடைகள் அமைக்க அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- **Nokia, Samsung, Motorola, Sony Ericson, Airtel, Aircel, Vodaphone, MTS, Tata Indicom, Reliance** போன்ற பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.
- எங்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு தயாரிப்பு, சர்வீசிங் மற்றும் விற்பனை நிறுவனங்களில் வேலை கிடைக்க இலவச உதவி வழங்கப்படும்.
- அனைத்து வசதிகளுடன் கூடிய பிராக்டிகல் வகுப்புகள்

Tel : 2827 5522,
Mob : 9094444880 , 9444422721

No 5, Noor Veera Samy Iyer Street, 2nd Lane, (Behind Nungambakkam Police Station), Nungambakkam. Ch-34

RNI Regn. No.TN TAM/2001/03914 R.Dis.No.1288/2008



**நுங்கம்பாக்கத்தில் மாநகராட்சி சார்பில் செல்லப் பிராணிகள் மருத்துவமனை**

# மேயர் மா.சுப்பிரமணியன் திறந்துவைத்தார்

நுங்கம்பாக்கம் 107வது வட்டத்தில் மாநகராட்சி ஆண்கள் பள்ளி அருகில் செல்லப் பிராணிகளுக்கான மருத்துவமனையை மேயர் மா.சுப்பிரமணியன் அவர்கள் திறந்துவைத்தார்.

மேற்கண்ட விழாவில் மாநகராட்சி ஆணையர் ராஜேஷ் லக்கானி, மாமன்ற உறுப்பினர்கள் ருக்மணி நாராயணன், வா.கணேசன், மா.பா.அன்புதுரை, மாநகராட்சி எதிர்கட்சி தலைவர் சைதை ரவி, டாக்டர் சேம.நாராயணன், வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர்.நாதன், எஸ்.தங்கராஜ், பா.வெங்கி, ருத்ரன், மற்றும் மாநகராட்சி அதிகாரிகளும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.












Owned, Published and Printed by **S. RANGANATHAN,** published from 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034
and printed at **J.S.R. GRAPHICS & PRINTERS**, 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034. **Editor: S. RANGANATHAN.**